SC No.109/2025

17.02.2026

PW1

**திருமதி மகாலெட்சுமி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(A1 & A2 are present).

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை யாரென்று எனக்கு தெரியாது. அ.சா.3 என் கொழுந்தனார். அ.சா.4 அவரது மனைவி. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரம் இரவு நேரம், இருட்டு நேரம் என்றால் சரி. சம்பவத்தை நான் ஓடி போய் பார்த்தபோது என் கொழுந்தனார் இரத்தத்துடன் கிடந்தார். போலீசார் விசாரித்தபோதும் இதைதான் சொல்லியுள்ளேன். இதற்கு முன்பாக சாட்சியம் அளிக்க வந்தபோது போலீசார் சொல்லிக் கொடுத்தபடி நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்திருந்தால் தற்போது சொன்ன விபரத்தை சொல்லியிருப்பேன். என்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:12:07 +0530

கொழுந்தனாருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:12:15 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

SC No.109/2025

17.02.2026

PW 2

**திரு பாஸ்கர்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(A1 & A2 are present).

**குறுக்கு விசாரணை**

அ.சா.3 என் மகன். அ.சா.4 அவரது மனைவி. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரம் இரவு நேரம், இருட்டு நேரம் என்றால் சரி. சம்பவத்தை நான் ஓடி போய் பார்த்தபோது என் மகன் இரத்தத்துடன் கிடந்தார். போலீசார் விசாரித்தபோதும் இதைதான் சொல்லியுள்ளேன். இதற்கு முன்பாக சாட்சியம் அளிக்க வந்தபோது போலீசார் சொல்லிக் கொடுத்தபடி நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்திருந்தால் தற்போது சொன்ன விபரத்தை சொல்லியிருப்பேன். என் மகனுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.17 17:12:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.